மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பொதுப் பணி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் போக்குவரத்து நெரிசல் அதிகமாக இருக்கின்ற காரணத்தினால், அங்கேயுள்ள ரவுண்டானாவிலே ஒரு மேம்பாலம் அமைக்க வேண்டுமென்று இங்கே கோரிக்கை வைத்திருக்கின்றார்கள். அதை ஆய்வு செய்து, அந்த ஆய்விலே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, அங்கு போக்குவரத்து நெரிசல் அதிகமாக இருக்கின்றபட்சத்திலே, நிதிநிலைக்கேற்ப அரசு ஆவன செய்யும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 102, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

102—

துணை மின் நிலையத்தை தரம் உயர்த்துதல்

***1864 திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குளச்சல் தொகுதி, சர்த்தபுரம் பேரூராட்சி, செம்பொன்விளையிலுள்ள துணை மின் நிலையத்தை தரம் உயர்த்த அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிய அந்த துணை மின் நிலையத்தை தரம் உயர்த்த வேண்டிய அவசியம் எழவில்லை. ஏனென்று சொன்னால், அங்கு மின் பளு குறைவாக இருக்கின்றது.

2016 ஆகஸ்ட் 24]

வருங்காலத்திலே மின் பளு அதிகரிக்கும்பட்சத்தில், அந்த எம்.வி.ஏ.-ஐ மாற்றுவதற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு செல்லப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ், இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. பலராமன் அவர்கள்.*

திரு. ப. பலராமன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எல்லோரும் எல்லாமும் பெற வேண்டும், இங்கு இல்லாமை இல்லாத நிலை வேண்டும் என்ற தத்துவத்தின் அடிப்படையில், (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு இதய தெய்வம் தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்கால ஆட்சியில், என்னுடைய பொன்னேரி தொகுதிக்குட்பட்ட ஆரணி பேரூராட்சியில் ஏற்கெனவே 33 கே.வி. திறன் உள்ள அந்த இடத்தில், 110 கே.வி. திறன் கொண்ட துணை மின் நிலையத்தை அமைத்து, அங்குள்ள நெசவாளர்களின் வாழ்க்கையில் ஒளியேற்றித் தருகின்ற புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய நல்லாட்சியில், மாண்புமிகு அம்மா அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு சென்று, 15 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள்தொகையைக் கொண்ட பேரூராட்சியாக இருக்கின்ற காரணத்தினால் அந்தப் பகுதிக்கு ஒரு துணை மின் நிலையம் அமைத்துத் தருமாறு மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

முற்பகல் 10-15

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவள்ளூர் மாவட்டத்தில் 110 கிலோ வாட் திறன் கொண்ட 32 துணை மின் நிலையங்கள் இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற ஆரணி பகுதியில் 33 கே.வி. திறன் கொண்ட மின் நிலையத்தை 110 கிலோ வாட் திறன் கொண்டதாக தரம் உயர்த்தித் தரவேண்டுமென்று*

கேட்டிருக்கின்றார்கள். அந்தப் பகுதியிலே மின்னழுத்தம் எந்த அளவுக்கு இருக்கிறதென்பதை ஆராய்ந்து, தேவையிருப்பின், நிதி நிலைக்கேற்ப, மாண்புமிகு அம்மா அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 103, மாண்புமிகு உறுப்பினர் திரு. என். முருகுமாறன், மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

103—

மகளிர் கலைக் கல்லூரி

***105—திரு. என். முருகுமாறன்:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காட்டுமன்னார்கோவில் தொகுதியில் மகளிர் கலைக் கல்லூரி துவக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், உயர் கல்வித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) கடலூர் மாவட்டம், காட்டுமன்னார்கோவில் தொகுதியில் மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி துவங்குவது குறித்த கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. என். முருகுமாறன் அவர்கள்.*

திரு. என். முருகுமாறன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறு நரிக் கூட்டங்கள் சிங்கத்தை எதிர்கொள்ள முடியுமா? (மேசையைத் தட்டும் ஒலி) தமிழினத்தினுடைய சிங்கமாக, தமிழர்களுடைய அங்கமாக, உயர் கல்வித் துறையினுடைய ஈடில்லா அங்கமாக விளங்குகிற,*